மற்றவர்களும் தங்களுடைய உணர்வை ஒவ்வொரு ஊரிலும் வெளிப்படுத்தி வருகிறார்கள். எங்கே பார்த்தாலும் அமைதியாக வும், சிறப்பாகவும் அவை நடைபெறுகின்றன. இப்படி சங்கிலித் தொடர் மற்றும் கூட்டங்கள் எல்லாம்கூட ஒழுங்காக வும், சிறப்பாகவும் நடைபெற்று வருகின்றன. ஆகவே, ஊர்வலத் தில் தடியடி நடத்தித்தான் தீர வேண்டும் என்பது போலீசா ருடைய கொள்கை அல்ல. எவ்வளவோ ஊர்வலங்கள் எல்லா ஊர் களிலும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. மதுரையிலே என்ன ஏற்பட்டது, அதற்கு என்ன காரணம் என்பது தெரிய வேண்டும்.

அந்தக் காரணம் இப்போல நம்மிடத்தில் இல்லை. தடியடி நடத்த வேண்டிய அளவில் என்று சொன்னால், வன்முறை அல்லது வேறு செயல்கள் நடைபெற்றால்தான் போலீஸ் தலை யிட்டிருக்கும். என்ன நடைபெற்றது என்று கிட்டவட்டமாக இப்போது சொல்ல முடியாது. விசாரித்துத்தான் சொல்ல வேண்டும். வழக்கு தொடரும் அளவுக்கு என்ன நடைபெற்றது என்பதையும், வழக்கிலே தங்களுடைய நிலைமையை வாதாடி எடுத்துச்சொல்லி நீதி பெறவும் வாய்ப்பு இருக்கிறது. இருந் தாலும் முழுமையாக ஆய்ந்து பார்த்து, மாண்புமிகு உறுப்பினர் பிரச்சினையை எழுப்பியிருப்பதன் காரணமாக முழு விஷயங் களையும் ஆராய்ந்துப் பார்த்து, அதன்மீது எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை ஆராய்ந்துப் பார்த்து, தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதையும், அதனுடைய நிலைமைகளைப் பார்த்து எடுக்கக் கூடியவைகளை அரசு எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அவையில் வைக்கப்பெறாதது குறித்து.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப விரும்பு கிறேன். இங்கே அரசு உறுதிமொழிக் குழுவின் ஐந்தாவது அறிக்கை வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள், ஆனால் அது வைக்கப்படவில்லையே, அது பற்றி விளக்கம் பெற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழு வின் தலைவர் அறிக்கையை அவையில் அளிக்கும்போது உறுப் பினர்களுக்குக் கொடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
VAYMAIYE VELLUM
TRUTH ALONE TRIUMPHS